**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.116/2025**

| Deposition of Name | சச்சிதானந்தம் | Prosecution | LW-2 as PW.3 |
|---|---|---|---|
| Father Name | நமச்சிவாயம் | Defence | |
| Village | ஆச்சாள்புரம் | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 71/2026 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

21.01.2026.

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. எதிரிகள் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எனது வீட்டில்இருந்த 3 வீடுகள் தள்ளி குடியிருந்து வருகிறார்கள். அசா.1 நமச்சிவாயம் எனது மகன் ஆவார். ப,சா.3 எனது மனைவி ஆவார். கடந்த 06.10.2024 ம் தேதி சுமார் மாலை 3.30 மணி யிலிருந்து 4 மணிக்குள் நானும் எனது வேலை ஆள் வைத்தியநாதன் என்பவரும் எங்களுக்கு சொந்தமான வீடுகளுக்கு நடுவே உள்ள பகுதியை சுத்தம் செய்து கொண்டிருந்தோம். உங்களை தான் எதிர் பார்த்தோம் டா என சொல்லி சேகர் என்பவர் என்னை உருட்டு கழியால் முதுகு மற்றும் இடுப்பில் தாக்கினார். எனது அலறல் சத்தம் கேட்டு எனது மனைவி ஓடிவந்தார். எனது மனைவியையும் முதுகில் அதே கழியால் தாக்கினார்.

எங்கள் இருவரின் அலறல் சத்தம் கேட்டு எனது மகன் நமச்சிவாயம் என்பவர் வீட்டிற்குள் இருந்து ஓடிவந்தார். எனது மகனை சேகர் என்பவர் இரும்பு பைப்பால் முதுகில் அடித்தார். அப்போது சேகரின் மனைவி அறுவாளை எடுத்துக்கொண்டு அவரது வீட்டில் இருந்து ஓடிவந்தார். அவர் எடுத்து வந்த அறுவாளை சேகர் என்பவர் வாங்கி எனது மகனை வலது பக்க கண் மற்றும் மூக்கில் வெட்டினார். அப்போது எனது மகன் கையால் தடுத்தார்.

KAILAASH R Digitally signed by KAILAASH R Date: 2026.01.21 18:43:31 +0530

அதன் பிறகு எனது மகனுக்கு இரத்தம் அதிகமாக வரவே நாங்கள் அங்கிருந்து காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தோம். காவலர்கள் எங்களை முதலுதவி எடுத்துக்கொள்ளுமாறு அறிவுறுதினார்கள் அதன் பிறகு நாங்கள் சீர்காழி GHக்கு சென்று சிகிச்சை எடுத்துக்கொண்டோம். எதிரிக்கும் எங்களுக்கும் இடம் சம்பந்தமாக பிரச்சனை இருந்து வந்தது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை தன்னிச்சையாக முடித்துகொள்ளப்பட்டது.**

KAILAASH R

Digitally signed by KAILAASH R
Date: 2026.01.21 18:43:40 +0530

<u>**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**</u>

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.116/2025**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | ராஜேஸ்வரி | Prosecution | LW-4 as PW.4 |
| Father Name | க/பெ.நமச்சிவாயம் | Defence | |
| Village | ஆச்சாள்புரம் | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 62/2025 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

<u>**21.01.2026.**</u>

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. எதிரிகள் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். கடந்த 06.10.2024 ம் தேதி மாலை 3 மணியளவில் நான் வீட்டில் இருந்தேன். அப்போது எனது கணவர் ஆள் வைத்து வீட்டு கொல்லையை சுத்தம் செய்து கொண்டிருந்தார். எனது கணவர் அலறல் சத்தம் கேட்டு நான் சென்று பார்த்தேன். அப்போது சேகர் என்பவர் எனது கணவரை பைப் கம்பியால் அடித்துக்கொண்டிருந்தார். நானும் சென்று சத்தம் போடவே எனது மகன் வந்தார். எனது மகனிடமும் சேகர் சண்டையிட்டுக்கொண்டிருந்தார். அப்போது சேகர் சிறிது நேரம் இருங்கள் என்று சொல்லிக்கொண்டிருந்தார். சிறிது நேரம் கழித்து ராஜாராமன் மற்றும் அஜய் இருவரும் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். என்ன நடந்தது என்று விசாரிக்காமல் ராஜாராமன் பைப்பால் எனது மகனை தாக்கினார். சேகர் மனைவி அருவாள் எடுத்து கொடுக்க சேகர் எனது மகனை வலது பக்க நெற்றியில் வெட்டினார்.

அப்போது நான் சென்று தடுத்தேன். சேகர் என்னையும் கட்டையால் முதுகில் தாக்கினார். அங்கிருந்து நாங்கள் காவல் நிலையம் சென்ற பின் மருத்துவ மனைக்கு சென்று சிகிச்சை எடுத்துக்கொண்டோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

KAILAASH R

Digitally signed by KAILAASH R
Date: 2026.01.21 18:43:48 +0530

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை தன்னிச்சையாக முடித்துகொள்ளப்பட்டது.**

KAILAASH R

Digitally signed by KAILAASH R
Date: 2026.01.21 18:43:55 +0530